தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-2-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கேரட் மற்றும் பீட்ரூட்டிற்கு அறுவடை சமயத்தில் நல்ல விலை கிடைக்கும்

விவசாயிகள் கேரட் மற்றும் பீட்ரூட் நடவு முடிவிற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் காய்கறி பயிர்களான கேரட் மற்றும் பீட்ரூட் ஆகியவற்றின் மேட்டுப்பாளையம் மொத்த சந்தையின் விலை நிலவரங்களை ஆராய்ந்து கீழ்கண்ட விலை முன்னறிவிப்புகளை வெளியிடுகின்றது.

### i. கேரட்

தமிழ்நாட்டில் கேரட் நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் முக்கியமாக பயிரிடப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் விளையும் கேரட்டிற்கு நுகர்வோர் மத்தியில் அதிக முக்கியத்துவம் வழுங்கப்படுகிறது. தோட்டக்கலைத் துறை புள்ளியியல் விவரங்களின் படி ஜனவரி 2015ல் நீலகிரி மாவட்டத்தில் 201.20 எக்டர் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில், குறிப்பாக கொடைக்கானல் வட்டத்தில் 515 எக்டர் கேரட் பயிரிடப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்தின் ஜனவரி மாதத்தின் கேரட் சாகுபடி பரப்பை விட அதிகமாகும். நீலகிரி மாவட்டத்தில் கேரட் சாகுபடி பரப்பானது 2012-13ம் வருடத்தை காட்டிலும் 2013-14ம் வருடத்தில் 1500 எக்டர் அதிகரித்து உள்ளது.

விலை விவர ஆய்வின் படி, பொதுவாக கேரட்டின் விலை ஜூலை முதல் அக்டோபர் மாதம் வரை அதிகமாக இருக்கும். தென்மேற்கு பருவ மழை தொடங்கி வரத்து குறைய தொடங்குவதால் இவற்றின் விலை மொத்த சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 35 முதல் 40 வரை இருக்கும்.

### ii. பீட்ரூட்

தமிழ்நாட்டில் பீட்ரூட் முக்கியமாக நீலகிரி மாவட்டம் மற்றும் திருப்பூர் மற்றும் தேனி மாவட்டத்தில் சமவெளியில் குறிப்பிட்ட வட்டாரங்களில் பயிரிடப்படுகிறது. மலையில் சாகுபடி

செய்யப்படும் பீட்ரூட்டிற்கு தமிழக நுகர்வோர் மத்தியில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. தோட்டக்கலைத் துறை புள்ளியியல் விவரங்களின் படி கடந்த ஜனவரி 2015ல் நீலகிரி மாவட்டத்தில் 17.7 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

விலை விவர ஆய்வின் படி, பொதுவாக பீட்ரூட்டின் விலை ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை குறைவாக இருக்கும். அதன் பிறகு விலை உயரத் தொடங்கி ஜுன் - ஜுலை மாதங்களில் அதிகபட்சமாக இருக்கும். சந்தையில், தற்போது உள்ளூர் மற்றும் வெளி மாநில வரத்து குறிப்பாக, கர்நாடக மாநில ஹாசன் மாவட்ட வரத்து அதிகரித்து காணப்படுகிறது. அதனால் மேட்டுப்பாளையம் மொத்த சந்தையில் விலை குறைந்து சமவெளி பிட்ரூட்டிற்கு கிலோவிற்கு ரூபாய் 5 முதல் 8 வரையிலும் மற்றும் நீலகிரி மாவட்ட பீட்ரூட்டிற்கு கிலோவிற்கு ரூபாய் 15 முதல் 20 வரையிலும் விற்பனையாகிறது.

எதிர்வரும் மாதங்களின் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த ஒன்பது வருடங்களின் மேட்டுப்பாளையம் காய்கறி மொத்த சந்தையில் விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், கேரட் மற்றும் பீட்ரூட்டின் விலை வரும் மே – ஜுன், 2015 மாதங்களில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மேலும், கேரட்டின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூபாய் 15 முதல் 20 வரையும் மற்றும் பீட்ரூட்டிற்கு கிலோவிற்கு ரூபாய் 12 முதல் 15 வரையும் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் விவசாயிகள் கேரட் மற்றும் பீட்ரூட் சாகுபடியை மார்ச் - ஏப்ரல், 2015 மாதங்களில் எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்
விஜயநகரம், உதகமண்டலம் - 643 001.
தொலைபேசி: 0423-2442170

மக்கள் தொடர்பு அலுவலர்